முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | 24–4–59 | வெள்ளி | ஒலி: 48

அதிசய ஆசிரியர்! அற்புத மாணவர்கள்!!



ஊட்டியில் ஆரன்மூர் அரண்மனைக்குத் "தமிழகம்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள்; ஆள்வந்தார்கள்!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

34. நாடோடி மன்னன் ஜெங்கிஸ்கான்

அன்புள்ள மாதவி,

நாடோடிகளாக வாழ்ந்த இனத்தவர்கள் நாடாண்டதற்கு வரலாற்றில் நிறையச் சான்றுண்டு. ஷார்மேன், ஹரூன் — உல்—ரஷித், ஹர்ஷன், டாய் — சுங் போன்ற உலகப் பேரரசர்களின் மறைவுக்குப் பின், பலம் பொருந்திய நாடுகளும் பராக்கிரமசாலிகளான மன்னர்களும் சுமார் மூன்று நூற்றுண்டுக் காலம் உலக அரங்கில் தலைகாட்டவே இல்லை. சிறு சிறு நாடுகளாகச் சிதறுண்டு கிடந்த உலகில், வலிமைக்கோர் இலக்கணமாய், படை நடத்தும் ஆற்றலுக்கோர் வழிகாட்டியாய், பேரிடியென முழங்கி, பெரு வெள்ளமெனப் பாய்ந்து, இதுவரையில் வரலாறே கண்டிராத மாபெரும் நிலப்பரப்பைத் தன் அடிபணியச் செய்தான் மாவீரன் ஜெங்கிஸ்கான். (Jenghiz-khan) நாடோடிகளின் இனத்தில் பிறந்து, நாடாளும் பேரரசனாய் விளங்கிய ஜெங்கிஸ்கான் மனிதனின் கதையில் சுவைமிக்க கதா பாத்திரம்!

அலக்சாண்டரின் ஆற்றலைக் கண்டு உலகம் வியந்திருக்கிறது! விழுப்புண்படாத நாளெல்லாம் வீண் நாள் என எண்ணிய ஹன்னிபாலின் படைவலிமையும் வீரமும் வரலாற்றுச் சிறப்புப் பெற்றவை. சிரம் அசைத்தால் சிம்மாதனங்கள் விழுந்துவிடும் எனப் போற்றப்பட்டவன சீசர். ஷார்லமேனின் போர்ச் சாகசம் ஒரு தனி இலக்கியம். இப்படி உலக அரங்கில் ஜெங்கிஸ்கானுக்கு முன் பீடுநடை போட்ட தளபதிகள் பலர். ஆனால் அவர்கள் எவரும் ஜெங்கிஸ்கானைப் போல் அவ்வளவு பெரிய நிலப்பரப்பில் ஆணை செலுத்தியதில்லை. கிழக்கே சீனாவிலிருந்து மேற்கே போலந்துவரை — ஆசியா, ஐரோப்பா ஆகிய இருபெரும் கண்டங்களையும் இணைத்து—மத்திய கிழக்கு உட்பட சாம்ராஜ்யமொன்றைக் கட்டியாண்டவன் ஜெங்கிஸ்கான். மங்கோலிய இனத்தின் மகோன்னதத் தலைவன் அவன்!

கி. பி. 1155-ல் ஜெங்கிஸ்கான் பிறந்தான். அவனுக்குப் பதிமூன்று வயது நிரம்பியபோது அவனுடைய தந்தை கொல்லப்பட்டான். ஜெங்கிஸ்கானுடைய தாய், தந்தையிழந்த தன் மைந்தனை மாவீரன் ஆக்கி, மங்கோலிய இனத்தின் தலைவனாகச் செய்ய வேண்டுமென்ற லட்சியத்துடன் வளர்த்தாள். அவள் பெயர் ஹௌலம் (Houlum) என்பது. ஹௌலத்தின் கனவு வீண் போகவில்லை. மங்கோலிய இனத்தின் ஒரு பிரிவின் தலைவனாக விளங்கிய ஜெங்கிஸ், தன்னுடைய ஐம்பத்தோராவது வயதில் மங்கோலியர்களின் தலைமைப் பதவியான 'கான்' என்ற பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜெங்கிஸ்கான் ஆனான். சுவை நிரம்பிய ஜெங்கிஸ்கானின் வாழ்க்கை உண்மையிலேயே அப்பொழுதுதான் ஆரம்பமாயிற்று.

சிதறிக்கிடந்த மங்கோலிய இனத்தைத் . தன் தலைமையில் ஒன்று கூட்டினான். போர்த் திறமும், புஜபலமும், புரவிச் சவாரி செய்வதில் புயல் வேகம் கொண்டவருமான மங்கோலியர்கள் ஒன்றுபட்டபோது மகத்தான சக்தியாயினர். அவர்களுடைய மின்னல் வேகத் தாக்குதல்களுக்குமுன் நாடுகள் நிலைகுலைந்தன; மன்னர்கள் மண்டியிட்டனர்; நாட்டுக்கு நாடு இருந்த எல்லைகள் மறைந்தன! மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்ட போர்ச் சக்தி, புதியதொரு சாம்ராஜ்யத்தை நிறுவியது. ஜெங்கிஸ்கானுடைய குதிரையின் குளம்போசை கேட்டுக்குவலயமே நடுங்கியது. இந்தியாவையும் ஜெங்கிஸ் எட்டிப் பார்த்திருக்கக் கூடும்; என்ன காரணமோ அவன் இந்தியாவுக்குள் நுழைய முயற்சி செய்யவே இல்லை!

ஜெங்கிஸ் திக்விஜயத்திற்கு புறப்பட்டபோது, சீனாவில் சுங் சாம்ராஜ்யம் இருந்தது; அதுவன்றி பீகிங்கைத் தலைநகராகக் கொண்டு கின் சாம்ராஜ்யமும் (Kin Empire) இருந்தது.

எகிப்தையும் பாலஸ்தீனத்தையும் சலாடினின் சந்ததியார் ஆண்டு வந்தார்கள். புனித ரோம் சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தியாக இரண்டாம் ஃபிரடரிக் (Fredrick ii) விளங்கினான். இங்கிலாந்தில் 'மாக்ன கார்ட்டா' (Magna charta) என்ற உரிமைச் சாசனம் கையெழுத்தாகிக் கொண்டிருந்தது. டெல்லியில் அடிமை வம்சத்தினர் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

ஜெங்கிஸ் நாடு பல வென்றான். அவன் ஆசைக்கு எல்லை வகுத்துக் கொள்ளும் சமயம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. சாமர்க்கண்டு மன்னனிடம் சமாதானத் தூதர்களை அனுப்பினான். களம் பல கண்ட மாவீரன் சமாதானத் தூதர்களை அனுப்புவதைப் பார்த்த சாமர்க்கண்டு மன்னன் தப்புக் கணக்கு போட்டுவிட்டான். அமைதி பேச வந்த ஜெங்கிஸ்கானின் தூதர்களைப் படுகொலை செய்தான்.

தூதர்கள் கொல்லப்பட்டதைக் கேட்ட ஜெங்கிசின் குருதி கொதித்தது! ஆசைக்கு அவன் போட்ட அணைகள் உடைந்தன. பெருந்தன்மையை மதிக்கத் தெரியாத பேதைக்குப் புத்தி புகட்ட எண்ணினான். மங்கோலியப் படைகள் அணிவகுத்தன; போர் முரசம் ஆர்த்தன; சாமர்க்கண்டு நகரம் புழுதி மேடாயிற்று!

பொன்னும் மணியும் அணி செய்து நின்ற பொக்காரா நகர மாளிகைகள் மண்ணோடு மண்ணாயின. சாமர்க்கண்டுவாசிகள் ஐம்பதாயிரம் பேர் கொல்லப்பட்டார்கள்; ஜெங்கிஸ் வஞ்சம் தீர்த்துக் கொண்டான்!

கி. பி. 1227-ல், தன்னுடைய 72-ம் வயதில் ஜெங்கிஸ் காலமானான். அவனுடைய மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு மங்கோலியாவில் இருந்த காரகோரம் என்ற சிறுநகரமே தலைநகராக விளங்கியது.

ஜெங்கிஸ்கான் மகமதிய மதத்தவன் என்று சிலர் தவறாக எண்ணுவதுண்டு. அவன் மகம்மதியன் அல்ல என்பதை நீ முதலில் தெரிந்து கொள்ள வேண்டும், ஷாமாயிசம் (Shamaism) என்பது அவன் கைக்கொண்ட மதம். வான வெளியைப்பார்த்து தொழுகை செய்வதுதான் அம்மதத்தின் வழிபாட்டு முறையாகும். தனக்குக் கஷ்டம் ஏற்பட்டபோதெல்லாம் நீல வானவெளியைப் பார்த்தே ஜெங்கிஸ்கான் ஆறுதல் பெறுவானாம்.

நாடோடி இனமான மங்கோலிய இனத்திலே பிறந்த ஜெங்கிஸ், இயற்கையழகில் நிறைய ஈடுபாடு கொண்டவன். அவனுடைய தாயகத்திலிருந்த ஸ்டெப்பிஸ் புல்வெளிகள் அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டவை. இயற்கையில் மனத்தைப் பறிகொடுத்த அவன் செயற்கையழகுடன் மிளிர்ந்த நகரங்களை வெறுத்தான். அவைகளின் அழிவிலிருந்து புதிய நாகரிகம் தோன்றுமெனக் கனவு கண்டான். அவனுடைய இந்த எண்ணம் அவனுடைய பிற்போக்கு மனப்பான்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஜெங்கிசுக்கு எழுதப் படிக்கத் தெரியாது!

ஜெங்கிஸ்கானின் மரணத்துக்குப்பின் அவனுடைய மைந்தன் ஆக்டாயக்கான் மங்கோலியர்களின் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இவனுடைய காலத்தில் மங்கோலிய சாம்ராஜ்யம் வளர்ந்தது. ஜெங்கிஸ்கானுடன் ஒப்பிட்டால், ஆக்டாய்க்கான் அமைதிப் பிரியன். 1242-ல் இவன் இறந்து போனான். இவனுக்குப்பின் 1251—1259 வரை மங்குகான் ஆண்டான். கி. பி. 1260-ல் குப்லாய், கானாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். இவன் காலத்தில் மங்கோலிய சாம்ராஜ்யத்தின் தலைநகரம் காரகோரத்திலிருந்து பீகிங்கிற்கு மாற்றப்பட்டது. இவனுடைய சபைக்கு ஐரோப்பாவிலிருந்து பல கல்விமான்களும், வணிகர்களும் விஜயம் செய்தனர். இவர்களில் குறிப்பிடத் தக்க வணிகன் மார்க்க போலோ (Marcopolo) அவன் எழுதி வைத்த பிரயாண நினைவுக் குறிப்புகள் ஆசிய மக்களை ஐரோப்பியர்கள் அறிந்து கொள்ளத் துணை புரிந்ததோடு, ஆசிய ஐரோப்பிய உறவை உறுதிப்படுத்தின.

கி. பி. 1260-ல் நிக்கோலோ மெஃபியோ என்ற இரு சகோதரர்கள் கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து வியாபார நிமித்தமாக கிரீமியா சென்று அங்கிருந்து

[தொடர்ச்சி பக்கம்—6]

தெற்கும் வளர்கிறது!

★

தேசீயத்தாரே, கவனிப்பீர்!

"வாக்கு சுத்தம் அற்றோரின் வார்த்தைக்கு மதிப்பளிக்காதீர்கள்! வடக்கு வாழ்கிறது என்பார்கள்; தெற்கு தேய்கிறது என்று தேம்புவார்கள்! அத்தனையும் புளுகு மூட்டைகள்; புள்ளிவிபரமற்ற பொய்யுரைகள்!''

— ஆளவந்தார் நம்மை நோக்கித் தொடுக்கும் அர்ச்சனையின் ஒரு பகுதி இது!

" வடக்கு மட்டும் வாழவில்லை; தெற்கும்தான் வாழ்கிறது; அமோகமாக வாழ்கிறது!''

— டெல்லியின் வஞ்சகத்துக்கு ஆரத்தி எடுக்கும் 'கங்காணிப் பண்பு' இது!

தெற்கும் வாழத்தான் செய்கிறதாம்; கணக்கெடுத்துக் காட்டத் தெரியாதோர் என்று நம்மைச் சாடுகின்றோர் தருகின்ற உண்மைகளைப் பார்க்கிறீர்களா?

உளறுவாயர்கள் கொட்டுகின்ற விபரீத விளக்கமல்ல; ஏடுகளிலிருந்து எடுத்துக் காட்டுகின்ற இம்மி பிசகாத புள்ளி விபரம்! தெற்கும் வாழ்கிறதாமே; அதை விளக்குகின்ற கொள்ளிக் கணக்கு!

சென்னை மாகாணத்தில்	...	94,025
ஆந்திரத்தில்	....	71,170
கேரளத்தில்	...	68,985
ஆனால், வடக்கே....		
அஸ்ஸாம்	...	20,404
மத்தியப் பிரதேசம்	...	22,650
பஞ்சாப்	....	20,406
பம்பாய்	...	20,308

எதனுடைய புள்ளிவிபரம் தெரியுமா இது? வடக்கைவிட தெற்கே அதிக எண்ணிக்கையைக் காட்டுகின்ற இந்தக் கணக்கு வேலையில்லாதோர் தொகையாகும்!

—200 வேலை தேடித் தரும் அலுவலகங்களைக் கொண்டிருந்த இந்திய அரசாங்கம் தந்த கணக்கிலேதான் இந்த உண்மை புலப்படுகிறது!

தெற்கும் வளருகிறது என்று சொல்லுகிற தேசீயத் தோழர்களே! எதிலே வளர்ந்திருக்கிறது தெற்கு என்பது இப்போதாவது புரிகிறதா?



வெள்ளி 24—4—59 சென்னை

நேருவே சொன்னாலும்...

வராதவர் வந்தார்!

வாழ்த்துக்கள் கூறப்பட்டன!

காந்தியார் சிலை திறக்க தலைநகரக் கடற்கரை சென்றார்; ஆனால், கடலோர மணற் குவியல்போல் தவிடு பொடியாக்கப் பட்டுவிட்டதே காங்கிரஸ் என்ற வேதனையோ என்னவோ—சிலை திறந்து என்ன பலன், அவர் கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்த பிறகு—என்று குமுறிவிட்டுச் சென்றார்.

வலம் வந்தார் திராவிடத்தை! தென்பாண்டி நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். திராவிடத்தின் பண்டைய மன்னர்களாம் பாண்டியர்கள் செங்கோல் செலுத்திய மண்ணிலே விந்தியம் தாண்டி வந்தவர் உலா நடத்தினார்!

திருச்செந்தூரிலே சந்தனக் குழம்பை வாரி வீசினார்களாம்; மலர்களை மழைபோல் பொழிந்தார்களாம்; கந்தம் கமழ் நந்தவனமாய் ஊர் மாறிற்றாம்!

நெல்லை முதல் தென்காசிவரை **50** மைல் நீள அலங்காரப் பந்தல் இவருக்காகவே போடப்பட்டதாம்! இத்தனையும் கண்டு களித்த அவர் தூத்துக்குடியையும் பார்க்க விரும்பினார்; அங்கு சென்றார்.

கடல் முரசடிக்கும் காட்சியைக் கண்டு களித்தார்; உடல் தேய உழைக்கும் உப்பளத்துத் தொழிலாளர்களைத் தட்டிக் கொடுத்தார்; மூச்சடக்கி கடல் வயிற்றுக்குள் சென்று முத்துச் சிப்பிகளைக் கொண்டு வருவோரைப் பாராட்டினார்; அதோடு...அந்தத் துறைமுகம் இருக்கும் நிலையையும் பார்த்தார். உடனே அவருக்கே உரிய ஆவேசம் வந்தது; பேசினார்:

"இந்தத் தூத்துக்குடித் துறைமுகம் முன்னேற்றம் அடைய வேண்டும். இதற்கான பணிகளைத் துவங்க வேண்டுவது இன்றியமையாதது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்!"

—இப்படிப் பேசியவர் வேறு யாருமில்லை. இந்தியத் துணைக் கண்டத்து முதலமைச்சர் நேருதான்!

உடனே நம் தென்னாட்டுப் பத்திரிகைகள் அதற்கு முக்கியத்வம் அளித்தன; பண்டிதரின் பண்புகளைப், பார்போற்றும் குணங்களைப் பக்கம் பக்கமாக எழுதின; தூத்துக்குடியின் அருமை பெருமைகளைக் கூறிக்கூறி மகிழ்ந்தன!

'பண்டிதரே ஒப்புக் கொண்டுவிட்டார்; இனிப் பாருங்கள் தூத்துக்குடி முன்னேறுவதை!'—என்று தேசீயப் பத்திரிகைகள் 'தலையங்கத் தமுக்கடித்து'க் கொண்டன!

இனி, பல ஆண்டுகள் எட்டோடும் எண்ணத்தோடும் மட்டுமே புதைந்து போய்விட்ட சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் புத்துயிர் எடுக்கப் போகிறது; 'எத்தனை காலம் எங்கள் இதய வேதனை தீராதிருக்கப் போகிறதோ' என்று தேம்பியழுதோரின் கண்ணீர் துடைக்கப் படப்போகிறது; வேலையற்று—அதனால் வாழ்வற்று உழன்றுகொண்டிருக்கும் பரிதாபத்திற்குரிய தென்னகத்து ஏழையர் குலத்தின் ஒரு பகுதியேனும் பிழைப்பதற்கு வழி கிடைத்துவிட்டது — இப்படியெல்லாம் இச் செய்தியறிந்த நல்லோரின் உள்ளங்கள் உவகையால் பூரித்தன!

'இந்தத் தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்' அதிகாரிகளால் முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டதுதான்; ஆனால் அதை யொட்டிய வேலைகளோ ஆமை வேகத்தில் சென்றன.

தூத்துக்குடி சின்னஞ் சிறிய துறைமுகம்தான் என்றாலும், சென்ற ஆண்டு ஏழு லட்சம் டன்னுக்கும் அதிகமாக ஏற்றுமதி இறக்குமதி செய்திருக்கிறது.

தென்பாண்டி மாவட்டங்களான மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி ஆகிய பகுதிகளிலிருந்து துணி, நூல், உப்பு, சிமிண்ட் முதலியவை ஏற்றுமதியாகின்றன; நிலக்கரி, கொப்பரை போன்றவை இறக்குமதியாகின்றன.

தூத்துக்குடியைச் சீர்படுத்தினால், சென்னை, கொச்சி துறைமுகங்களிலுள்ள நெருக்கடி தணியலாம்.

1926-ம் ஆண்டிலேயே உருவாகிய திட்டம் இது; இதை இப்போதாவது நிறைவேற்ற வேண்டும்.

—இப்படிப் புள்ளி விபரங்களை அள்ளித் தந்தன; தூத்துக்குடியின் பெருமையைப் பேசி பண்டிதர் சொன்னதைச் செயலாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட தேசீயப் பத்திரிகைகள் எல்லாமே. தொழிற் துறையில் தற்போது தமிழ்நாடு பின்தங்கியிருப்பதைக் கருதி தூத்துக்குடியை ஒரு முதல் தரத் துறைமுகமாக்க வேண்டுகிறோம்—எனக் கூறின!

ஊர் சுற்ற வந்த நேரு எழுப்பிய அந்த ஆசையை பேராசையாக வளர்த்துக் கொண்டனர், தேசீய பக்தர்களும்!

இவர்களின் ஆசையில் ஒரு கூடைத் தீயை வாரிக் கொட்டிற்று, அண்மையில் அமைச்சர் பட்டீல் தந்த பதில்! பாரதப் பிரதமர் தூத்துக்குடி பற்றி சொன்னதை சிறிதும் மதியாது, பாராளு மன்றத்தில் எஸ். கே. பட்டீல் கூறிய வழக்கமான பதில் இதுதான்:

"தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தித் திட்ட வேலை மேற்கொள்ளப் படுமென்பது உறுதி இல்லை. ஆராய்ச்சி வேலைக்குப் பணம் ஒதுக்கவில்லை!"

காலஞ் சென்ற அமைச்சர் பட்டேல் 'இரும்பு மனிதர்' என்ற பட்டத்துடன் விளங்கியவர். ஆனால் இன்றைய அமைச்சரான பட்டீலோ 'இரும்பு இதயம் படைத்த டில்லி அரசின்' சின்னமாய் விளங்குகிறார்.

ஆண்டுகள் முப்பது சென்றும் தேங்கி நிற்கும் திட்டம்—ஆளுகின்ற நேருவே நிறைவேற்ற வேண்டும் என்று ஒப்புக்கொண்ட திட்டம்—பற்பல நன்மைகளை உள்ளடக்கிய நல்லதோர் திட்டம்—இன்று சந்திச் சவமாகத் தூக்கி யெறியப்படுகிறது! சாக்கடைக் குழியிலே அழுத்தப்படுகிறது!

இந்த நிலையில், பழம் பெரும் திட்டமே பழங்கனவாய், பொய்க் கதையாய் போகுமோ என அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அமைச்சர் பக்தவத்சலம் இனிப் புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டிய வளங்களைப்பற்றிப் பேசித் தீர்த்திருக்கிறார், கோவையில்!

"மண்வள ஆராய்ச்சி இந்த மாநிலத்தில் மிக்க அவசியம், ஆனால் அதற்கு பணம் அதிகம் செலவாகிறபடியால் மாநில சர்க்காரால் நடத்த முடியாது; ஆகவே மத்திய சர்க்கார் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும்!"

மத்திய சர்க்காருக்கு, அறிவுரை கூறும் அளவிற்கு வளர்ந்த அமைச்சர் பக்தவத்சலத்தின் மனத் துணிவை நாம் பாராட்டினாலும் இருக்கின்ற நிலையைப்பற்றி கொஞ்சம் நினைக்கின்ற தன்மையைப் பெறாமல் போய்விட்டதுபற்றி வருத்தமடைகிறோம்.

பழம் பெரும் திட்டமே குப்பைக் கூடையில் என்றால், புதுத் திட்டங்களை அமைச்சரே சொன்னாலும்—அவருடைய முதல்வராம் காமராசரே சொன்னாலும் அந்தக் கேளாச் செவிகளில் ஏறாது! அவர்களுடைய பார்வை விந்தியத்திற்குத் தெற்கே திரும்பாது; அவர்களின் கல்லிதயத்திலே ஈரம் இருக்க முடியாது.

அவர்களிடம் திட்டங்களை எதிர்பார்ப்பவர்கள் — கனிவை எதிர்நோக்குபவர்கள்—கருணை விளையும் என நினைப்பவர்கள் இலவு காத்தக் கிளியாய் — நிலவு வேண்டும் என அழுத குழந்தையாய் ஏமாந்து முகம் வீங்கிப் போவார்கள்.

அறிஞர் அண்ணா சொன்னதுபோல் யூனியன் எனும் மத்திய அரசின் அமைப்பு ஒன்று இருக்கும்வரை இத்தகைய பாரபட்சங்கள்—வரலாற்று அநீதிகள் நடந்துதான் தீரும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஃ

வருந்துகிறோம்

கழக வீரர்கள்—கரூர்த் தோழர்கள் சோமு, கிட்டு, இராசமாணிக்கம் ஆகியோரின் தந்தையும், மதுரை டாக்டர் அருணாசலம் அவர்களின் மாமனாரும், நமதியக்க நண்பரும், வணிகப் பெருமகனாருமாகிய திரு. பெருமாள் (நாடார்) அவர்கள் கடந்த **17**-ம் தேதியன்று, கரூரில் இயற்கை யெய்தினார் எனும் செய்தி கேட்டு துயரக் கடலில் ஆழ்ந்தோம்.

போராடிப் பெற்றிட வேண்டிய புனித லட்சியத்திற்குத் தம் புதல்வர்களைத் தந்ததோடு, அந்த லட்சியத்தின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வந்த திரு. பெருமாள் அவர்களின் மறைவு, நமக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

அன்னாரின் மறைவால் வாடிடும் அவர்தம் குடும்பத்தாருக்கும், தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் நமது இதயப் பூர்வமான அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.

புண்ணிய பாரத் ரயில்வேயில் புரையோடிய புண்ணின் நாற்றம்!

பெண்ணைப் பார்க்காதடா பயலே! பெண்ணாசை கொண்டு பேராசைப் பேயாக மாறி, தாய் நாட்டை விற்றவர்கள், தரக்குறைவாக நடந்தவர்கள் சரித்திரத்தின் வீதிகளிலே—சமூதாயச் சந்துகளிலே தூக்கியெறியப்படுவார்களடா! கேவலம்; கணநேர இன்பத்திற்கு காலங் காலமாய்க் காத்துவரும் குணத்தை அடகு வைப்பது தகாது மகனே!

—என்று உபதேசம் தருகிற தந்தை, தனயனின் தலைமறைந்தவுடனேயே முக்காடிட்டு தலையுடன் வேசி வீடு நோக்கி நடை போட்டாராம்!

சிகரெட் குடித்தால் வாய் நாறும்; வயிறு கெடும்; ஈரல் வலியெடுக்கும்; இருமல் வரும்; உதடு கருகும்; உன் மனைவி வெறுப்பாள்; வேண்டாம், இந்த விபரீதம்!

—என்று அறிவுரை கூறுபவர், அடுத்த நிமிடத்திலேயே சிகரெட்டைப் பிடித்து மூக்கு வழியாகப் புகையை விட்டாராம்!

இந்த உவமைகள் உள்ளடக்கிய உண்மைக் கருத்து ஒன்றே ஒன்று. உபதேசம் புரிபவர்கள்—உதாரண புருஷர்களாய்த் திகழ வேண்டியவர்கள் தங்கள் உபதேசத்திலிருந்து நழுவாமல் இருப்பதில்லை. ஆனால் நழுவாமலிருக்க முயற்சிக்க வேண்டும்.

உபதேசத்தையும் புரிந்து ஊரையும் கெடுத்துக் கொண்டு திரிபவர்களின் உண்மை வேடம் என்றாவது ஒரு நாள் வெளிப்பட்டே தீரும். அவர்கள் முகத்திரை கிழிபட்டே தீரும்!

இரண்டாவது சொல்லப்பட்ட முகமூடிக்காரர்கள், பகல்வேடதாரிகள், ஊருக்கு உபதேசம் புரிபவர்கள் அரசியல் உலகில், இன்று 'அரசுபீடமேறிகளாய்' விளங்கும் காங்கிரஸ்காரர்களை நினைவுபடுத்துபவர்கள்தாம்!

'உபதேசம் புரியவே நாங்கள்; ஐம்பொறியையும், அங்குமிங்கும் ஓடும் மனக்குரங்கையும் அடக்கி வைத்துக் கேட்க நீங்கள்!' என்ற முறையிலேயே அவர்கள் வளர்ந்து வருகிறார்கள்.

"இந்த எதிர்க்கட்சிக்காரர்கள் இப்போது எதற்கெடுத்தாலும் ஸ்ட்ரைக், மறியல், கடையடைப்பு என்கிறார்கள்; இது எவ்வளவு தூரம் சமூகத்தைப் பாதிக்கிறது தெரியுமா? நாங்கள் நடத்தினோமே சத்தியாக்கிரகப் போர்—உண்ணாவிரதப் போர்.—யாருக்கும் தொந்தரவில்லாத போர்! ஆங்கிலேயன் கண்டு அலறினானே; அதுவல்லவா போர்?"—என்று சிந்தை குளிர்ந்து பேசும் காங்கிரஸ்காரரின் அறிவுரைப்படி உண்ணாவிரதத்தை யாராவது மேற்கொண்டால், அவ்வளவுதான்!

"உண்ணாவிரதமா? அது எங்கள் சொத்து! எங்கள் பாட்டனும் காந்தி சொத்து. தனி மாநிலம் வேண்டி தனிக்கொடியுயர்த்திப் போராடுகின்ற குஜராத்தி மக்களுக்கு எதிராக எங்கள் நிதியமைச்சர் — முன்னாள் பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் உண்ணாவிரதம் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் எந்த உயர்ந்த லட்சியத்திற்காக இந்நாட்டு ஏழைகளில் யார் உண்ணாவிரதம் இருந்தாலும் அபராதம்; சிறைத் தண்டனை; எதிர்த்துக் கேட்டால் தோட்டா பேசும்! ஜாக்கிரதை!" என்று மிரட்டுவார்கள், காங்கிரசார்!

உண்ணாவிரதக் கதைகள்தான் காங்கிரசாரின் 'எல்லோருக்கும் பொதுவான தத்துவத்தின்' இலட்சணயத்தை காட்டுகிறதென்றால் அண்மையில் நடந்த ஒரு நிகழ்ச்சி இவர்கள் உபதேசம் செய்துவிட்டு ஊரையும்கூட கெடுப்பவர்கள் என்பதை வெட்ட வெளிச்சமாக்கி விட்டிருக்கிறது.

அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவேண்டும்; சரிவரச் செய்ய வேண்டும், என்று கிளிப்பிள்ளையைப் போல் பேசிப் பழக்கப்பட்ட இந்தக் காங்கிரஸ் அமைச்சர்களின் யோக்யதையை எடுத்தியம்பியிருக்கிறார், ஆந்திர நாட்டு அமைச்சரொருவர், தன் செயலின் மூலம்!

ஆந்திர நாட்டுக் காங்கிரஸ் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக அங்கம் வகிக்கும் பட்டாபி ராம ராவ் எனும் இவர் அண்மையில் ரயில் பிரயாணம் செய்யும் போது குறிப்பிட்ட இடம் வந்தவுடன் இறங்கி வெளியே சென்றாராம். டிக்கட் வசூலிப்பதையே தன் கடமையாகக் கொண்டவரான 'டிக்கட் வசூலிப்பவர்' ஒருவர் அமைச்சர் அவர்களை டிக்கட் கேட்டிருக்கிறார்.

'டிக்கட்டில்லாப் பிரயாணி' யாம் அமைச்சர் அவர்கள் தன் அமைச்சர் பதவியின் அருமை பெருமையினைக் காட்டி, அதிகாரத்தைக் காட்டி, அவரைப் பயமுறுத்திவிட்டு வெளியேறினாராம்.

வெளியேறிச் சென்ற அமைச்சர், ரயில்வே அதிகாரிகளுக்கு தான் மானபங்கப்படுத்தப்பட்ட கதையை எழுதி தக்க நடவடிக்கை எடுக்கக் கோரினாராம்!

உடனே அதிகாரிகள் துடியாய்த் துடித்தனர். அமைச்சரை அவமதித்த அந்தக் 'கடமையைச் சரிவரச் செய்த கயவனை' அழைத்துவரச் சொன்னார்கள்; விசாரித்தார்கள்; வேலையை விட்டு நீக்கினார்கள்!

வேதனையும் விசித்திரமும் நிறைந்த இச்செய்தி இந்தக் காங்கிரஸ் உபதேசிகளின் உடலில் புரையேறிப் போய்விட்ட புண்ணைத்தான் காட்டுகிறது.

சமூகத்திற்காகத் தனி வாழ்வை ஒதுக்கி வைத்தவர்கள்தான் அரசியல் வாதிகள் எனும் எல்லைக் கோட்டை அடிக்கடி மீறுவதால் ஏற்பட்ட இந்த புண், நாளுக்கு நாள் சீழை வடித்துக் கொண்டு வளர்கிறது; நாசித் துவாரத்தில் படிந்திருக்கும் நரம்புகளே செயலிழக்கும்படி துர்நாற்றத்தைக் கிளப்பி வருகிறது.

இந்தத் துர்நாற்றத்தை அதிகப்படுத்துவதற்கென்றே இன்னொரு செய்தியும் அடுத்து வருகிறது, இந்த 'உதாரண புருஷர்' களின் ஆட்சியில்!

டிக்கட்டில்லாத பிரயாணிகளால் ஏற்பட்ட நட்டம் 5 கோடி ரூபாய்!

— தெரிவிக்கிறார் ரயில்வே துணையமைச்சர் எஸ். வி. ராமசாமி.

டிக்கட்டில்லாப் பிரயாணியைக் கண்டுபிடிக்கும் கடமைப் பணி ஆற்றுகின்றவனை அவனது வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்தப் பிரயாணிகளால் ஏற்பட்ட நட்டக் கணக்கைக் காட்டுகிறார், கனம்!

ஒருவர்தானே போனார், கோடி நட்டம் அவராலா ஆகிவிடும் என்று கேட்கலாம். ஆனால் கடமைப் பணி புரிபவர்களுக்கு 'கடமை புரிந்தால் புகழ் உண்டு; நலம் உண்டு; உற்சாகம் காட்டுவார்கள் அரசினர்' என்று தெரிந்தால்தான் தங்கள் பணியிலே ஊக்கம் காட்டுவர்; அதனால் நாட்டிற்கு ஆக்கம் கிடைக்கும். குறைந்த அளவு, ஆக்கமோ, ஊக்கமோ தராவிட்டால்கூட இந்த மாதிரி கடமையைச் சரிவரப் புரிந்தவர்களைப் பழிவாங்குகிற இழிசெயல்களைச் செய்யாது விட்டாலாவது அரசாங்கத்தில் பணிபுரிவோர் கடமையாற்ற வழிவகுக்கும்!

போலிக் கௌரவத்திற்காக விழிமூடி வழிதவறி நடப்போர் — மந்திரிகள் என்பதாலேயே டிக்கட் வாங்காது, டிக்கட் கேட்கும் அதிகாரியை வீட்டுக்கு அனுப்பும் இவர்கள் தங்கள் ரயில்வே இலாக்காவை ஏமாற்றிய டிக்கட்டில்லா பிரயாணிகளை 3 நாளில், சென்னையில் மாத்திரம் 1200 பேருக்குமேல் பிடித்தார்களாம்! — அதுவும் அவர்கள் தப்பித்துக் கொண்டு ஓடிவிடாதபடி — இதுவும் செய்தி!

ஊருக்கு உபதேசம் புரிந்துவிட்டு உண்மையாக உழைக்கும் ஊழியனைப் பழிவாங்கி 'டிக்கட்டில்லாப் பிரயாணம்' நடத்தும் மந்திரிகளை—முகமூடிக்காரர்களை — வேடதாரிகளை சும்மா விட்டுவிட்டு—வயிற்றில் பசியும், மேனியில் தூசியும் படிந்த ஏழை மக்கள் நாடு தாண்டி, காடு தாண்டிப் போனாலாவது தம் இரைப்பை நிறையாதா, சாவுக் கிரையாவதிலிருந்து தப்ப மாட்டோமா எனும் நப்பாசையில் ரயில் ஏறி, கக்கூஸ்களிலும், கதவோரங்களிலும் நடுநடுங்கிப் பயணம் நடத்துகின்ற அவர்களை வளைத்து வளைத்துப் பிடித்துக் குற்றம் சாட்டிக் கூண்டிலேற்றி செங்கோலை வளைத்த கயவர்கள் என்று கூறித் தண்டனை வாங்கித் தரும் இந்த அரசாங்கத்தின் செயலில் வீரமில்லை; ஈரமில்லை!

—அடியார்

முரசொலி

★ அடுத்த இதழ் ★

ஆறாவது ஆண்டைத் துவங்கும் நேரத்தில், முற்றிலும் புதிய பொலிவோடு உங்களைச் சந்திக்கும்!

'ரோமாபுரிப் பாண்டியன்'

தொடர் கதை துவங்குவதுடன்,

நீட்டோலை

இயல்-இசை-கூத்து

குறளோவியம்

நில் நண்பா, எங்கே ஓடுகிறாய்?

பிறைவானம்

— போன்ற உங்களைக் கவர்ந்த சுவையான பகுதிகளுடன் மே முதல் நாளன்று கிடைக்கும்!

12 பக்கங்கள்

[அதிகப் பிரதிகள் தேவையான விற்பனையாளர்கள் உடனே எழுதுவதுடன், உரிய கூடுதல் முன்பணத் தொகையையும் அனுப்பிவிட வேண்டுகிறோம்.]

தொழில் துறையில் துரோகம்:

இதயக் கூட்டில் இருப்பதென்ன? இரும்போ; கல்லோ? சொல்வீர்!

[சி. ஜம்பு]

சிமெண்ட் இன்றைக்குப் பல்வேறு ஆக்க வேலைகளுக்கு மிகவும் தேவைப்படுகிறது. நல்ல சாலைகள் போட, அணைக்கட்டுகள் நிர்மாணிக்க, பெரிய உறுதியான கட்டிடங்கள் கட்ட—இன்ன பிற காரியங்களுக்கு சிமெண்ட் முக்கியமாக அவசியமாகின்றது.

கட்டிடங்கள் உருவாக்கப் பயன்படுகின்ற பொருள்களின் தரத்தை நிரணயிக்க உறுதி, நிலைத்து நிற்கும் கால அளவு, கையாளுவதில் சுலபம்—ஆகிய மூன்று தன்மைகளும் அளவுகோலாக முக்கியமாய் கருதப் படுகின்றன. மரப் பலகைகள் உறுதியானதாகவும், கையாளுவதற்குச் சுலபமாகவும் இருக்கின்றன. ஆனால், நீடித்து நிலைத்து நிற்கும் கால அளவைப் பொருத்தமட்டில் மிகச்சிறப்பான தன்மை வாய்ந்ததல்ல. நீர்படும் நிலைமையிலிருந்தால் வர்ணப் பூச்சுகள் மரத்தை அழிவிலிருந்து பாதுகாக்கத் தேவைப்படுகின்றன. இரும்புப் பொருள்கள் உறுதியானவை. கையாளுவதற்கும் கடினமாயிருக்கும். ஈரத்திலிருந்து காப்பாற்ற இதற்கும் வர்ணப் பூச்சுகள் அவசியம்.

ஆனல் சிமெண்ட்--காங்கிரிட்டிற்கு மேற்கூறிய மூன்று தன்மைகளும் ஒருங்கே சிறப்பாய் அமைந்துள்ளன. எனவேதான் கட்டிடங்கள் நிர்மாணிப்பது போன்ற நல்ல காரியங்களுக்கு சிமெண்ட் பெருமளவு தேவைப் படுகின்றது.

பீகாரிலும், குவெட்டாவிலும் முறையே 1934, 1935-ல் பெரும் பூகம்பங்கள் ஏற்பட்டன என்பது நமக்குத் தெரியும். அந்தச் சமயத்தில் பல நகரங்கள் பாழ்வெளியாய் மாறின. பூகம்பம் விளைவித்த கொடுமையான நாசத்தையும் அழிவையும் சமாளித்துக் கொண்டு சில வீடுகள் உறுதியாய் நிலைத்து நின்றன. அவ்வீடுகள் காங்கிரிட்டால் கட்டப்பட்டவை எனப் பின்னர் தெரிய வந்தது. எனவே கல்லுறுதிக்கு சிமெண்ட் அவசியமாகின்றது. அழகு, நெருப்பிலிருந்து பாதுகாப்பு, நீடித்து நிலைத்து நிற்கும் தன்மை, உறுதி ஆகிய நல்விளைவுகள் சிமெண்டை பயன்படுத்துவதால் உண்டாகின்றது.

ஆக, சிமெண்ட் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, வளர்ச்சிக்கு உற்ற சாதனமாய் இருக்கின்றது.

சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள்கள் சுண்ணாம்புக் கற்கள், நல்ல களிமண், ஜிப்சம் ஆகியவைகளாகும். இவைகளோடு நிலக்கரியும், போக்குவரத்து வசதிகளும் தொழில் நன்ருய் சீருஞ் சிறப்புடன் திகழ அவசியமாகும்.

சிமெண்ட் உற்பத்திக்கான மூலப்பொருள்கள் திராவிடத்தில் வேண்டிய அளவு எளிதில் கிடைக்கின்றன. என்ருலும், சிமெண்ட் உற்பத்தியில் தென்னகம் தனக்குரிய பங்கை இழந்து நலிந்து வாடுகின்றது.

திராவிடம் தொழில் வளர்ச்சியில் சிறந்து முன்னேற பல்வேறு வாய்ப்புகளும் வசதிகளும் மல்கிக் கிடக்கின்றன. ஆனல், வாய்ப்புகளை—வசதிகளைப் பயன்படுத்தி நல்ல முறையில் தொழில்களை ஏற்படுத்தி வளரச் செய்வதற்குரிய அதிகாரம் அனைத்தும் வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியாளரிடம், டில்லித் தலைநகரில் குவிந்து கிடக்கின்றது. அவர்களோ தென்னுட்டின் முன்னேற்றங் குறித்து சிறிதளவும் கவலை கொள்ளாமல் வடநாடு எல்லா வகையாலும் வளமுற்றுச் சிறக்க ஆவன ஆற்றி வருகின்றனர். திட்டங்கள் தீட்டுகின்றனர்; புத்தம் புதிய தொழில்கள் வடநாட்டில் விரைவில் உருவாகின்றன. வாய்ப்புகளும் வசதிகளும் வளமாய் இருந்தாலும் தென்னுடு தன்னுரிமை இழந்து தொழில் அபிவிருத்தியில் புறக்கணிப்புக்கு ஆளாகித் தவிக்கின்றது.

இந்தக் கோர புறக்கணிப்பு நிலைமை பல்வேறு தொழில்களிலும் இருப்பதைப் போலவே சிமெண்ட் தொழிலிலும் நிலவி வருகின்றது. திராவிடத்தில் சிமெண்ட் உற்பத்திக்கான மூலப் பொருள்கள் நிறைய உண்டு. என்ருலுங்கூட, கடலில் மழையாய், பாலைவனத்து நிலவாய் அவைகள் நாதியற்று, கவனிப்பாரற்று வரிதே கிடக்கின்றன. இருக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் பலவும் வடநாட்டுக் கொள்ளை முதலாளிகளின் உள்ளங் கைகளில் உறைந்து கிடக்கின்றன. எனவே, வளர வகையற்று வடநாட்டு முதலாளிகளின் இச்சைக்கேற்றபடி வளைந்து கொடுக்கின்ற நிலைமையில் தென்னுட்டு சிமெண்ட் தொழில் இருக்கின்றது.

1955—56—ல் இந்தியாவில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளின் மாநில ரீதியான விபரமும், உற்பத்தி செய்யக்கூடிய அளவும் கீழ்வரும் விபரத்தால் தெளிவாய் அறியலாம்.

மாநிலம்	தொழிற் சாலைகள்	ஆண்டு உற்பத்தி [1000 டன் களில்]
பீகார்	6	1122
ஒரிஸ்ஸா	1	165
உத்திரப் பிரதேசம்	1	200
மத்தியப் பிரதேசம்	1	350
மத்திய பாரத்	1	60
ராஜஸ்தான்	2	525
பெப்சு	2	370
சௌராஷ்டிரம்	3	492
பம்பாய்	2	300
சென்னை	3	642
ஆந்திரா	2	189
மைசூர்	1	86
திருவாங்கூர்—கொச்சி	1	50
ஐதராபாத்	1	380

மேற்கண்டுள்ள விவரத்திலிருந்து, முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த 1955-56-ல் இந்தியா அனைத்திலும் 27 சிமெண்ட் தொழிற்சாலைகள் இருப்பதும், அவைகளிலிருந்து உற்பத்தியாகக்கூடிய சிமெண்ட் சுமார் 50 லட்சம் டன்கள் என்பதும் தெரிய வருகின்றது. தொழிற்சாலைகளில் 8 திராவிடத்திலும், அவைகளில் சிமெண்ட் உற்பத்தி அளவு சுமார் 14 லட்சம் டன் எனவும் அறிகின்ருேம். வடநாட்டில் 19 தொழிற்சாலைகளும், 36 லட்சம் டன் சிமெண்ட் அவைகளில் உற்பத்தியாகின்றது என்பதையும் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே. முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் திராவிடத்தில் சிமெண்ட் உற்பத்தி 14 லட்சம் டன்கள்; வடநாட்டில் சிமெண்ட் உற்பத்தி 36 லட்சம் டன்கள். ஆகவே, இந்தியத் துணைக் கண்டத்தில் 28 சதவிகிதம் தென்னுட்டிலும், 72 சதவிகிதம் வடநாட்டிலும் சிமெண்ட் உற்பத்தியாகின்றது.

வாய்ப்புகள், வசதிகளில் தென்னுடு சிமெண்ட் தொழிலில்

[தொடர்ச்சி பக்கம்—8]

மனிதனின் கதை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பொக்காரா போய்ச் சேர்ந்தனர். அங்கே அவர்கள் குப்லாய்கானின் தூதுவர்களைச் சந்தித்தனர். அவர்களோடு சேர்ந்துகொண்டு ஐரோப்பிய எல்லையைத் தாண்டி சீனு போய் குப்லாய்கானைச் சந்தித்தனர்; குப்லாய்கான் அவர்களை வரவேற்று உபசரித்தான். குப்லாய்கானின் விருந்தினர்களாகச் சில காலம் அவர்கள் இருந்து விட்டுத் தாய்நாடு திரும்பினர். தாய்நாடு திரும்பிய அவர்களிடம் நூறு கல்விமான்களான மத போதகர்களைத் தன் நாட்டுக்கு அனுப்பி வைக்கும்படி போப்பாண்டவருக்குக் கடிதம் கொடுத்தனுப்பினான் குப்லாய்கான். ஆனால் போப்பாண்டவர் குப்லாய்கான் விரும்பியபடி நூறு மதபோதகர்களை அனுப்பாமல், இரண்டு மத போதகர்களை அனுப்பி வைத்தார். நிக்கோலோவும் மேஃபியோவும், மத போதகர்களோடு, நிக்கோலோவின் மைந்தனை பதினேழு வயது மார்க்க. போலோவையும் உடன் அழைத்துக் கொண்டு, காடு, வனாந்தரங்களையும், மலைமடுக்களையும் பல கஷ்டங்களுடன் கடந்து, சீனு வந்து குப்லாய்கானைச் சந்தித்தனர். குப்லாய்கானின் சபை இளைஞன மார்க்க போலோவின் இதயத்தைக் கவர்ந்தது. எதையும் கூர்ந்து நோக்கி அறிவு பெறும் இயல்பை இயற்கையாகவே பெற்றிருந்த மார்க்க போலோ கண்ட புதுமைகளையெல்லாம் கருத்தில் இருத்திக் கொண்டான். தன் பிரயாண அனுபவங்களையெல்லாம் குப்லாய்கானுக்குக் கதை கதையாகச் சொன்னான். போலோவின் அறிவையும் ஆற்றலையும் கண்டு மகிழ்ந்த கான் அரசாங்கத்தில் பல உயர் பதவிகள் அளித்துக் கௌரவித்தான். பதவியைப் பயன்படுத்திக் கொண்டு பல இடங்களையும் சுற்றிப் பார்த்தான் போலோ. உலகத்தின் கூரையான திபேத் நாடு முழுதும்கூட அக்காலத்திலேயே சுற்றியலைந்தான் என்றால் அவனது பிரயாண ஆர்வத்தை நீயே கற்பனை செய்துகொள்.

போலோவின்மீது அபாரமான அன்பு பூண்டிருந்த குப்லாய்கான் தாய்நாடு திரும்பிப் போக அவனுக்கு அனுமதியளிக்கவில்லை. பதினேழு ஆண்டுகளுக்குப் பிறகு தாய்நாடு திரும்ப மார்க்க போலோவிற்கு ஒரு வாய்ப்புக் கிட்டியது.

பாரசீக மன்னனின் மங்கோலிய மனைவி மாண்டுபோனாள். அவள் இறக்கும்பொழுது தன் கணவன் மீண்டும் ஒரு மங்கோலியப் பெண்ணையே மணம் செய்து கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள்.

அவள் இறந்த பிறகு பாரசீக மன்னன். குப்லாய்கானுக்கு மூன்று தூதுவர்களை அனுப்பி, ஒரு மங்கோலிய அழகியை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டான். பதினேழு வயதுடைய குகாஷின் என்ற பேரழகியை கான் அவர்களுடன் அனுப்பி வைத்தான். கரடு முரடான பாதையில் செல்ல நல்ல

[தொடர்ச்சி பக்கம்—8]

ஆன்ற அவைத்தலைவ! அன்புள்ள அண்ணாவே!
சான்றோரே! நாவலரே! தாய்மாரே! யாவருக்கும்
முந்தி வணக்கம் மொழிகின்றேன்; பின்னெனக்குத்
தந்த தலைப்பின் கீழ்ச்சாற்றுகின்றேன் என்கவியை!

கண்ணீர்த் துளிகளே! கட்டுப்பாட் டுள்ளத்தால்
கண்ணியத்தைக் காக்கும் கடமைமிகு கண்மணிகாள்!
எண்ணியதை எண்ணியாங் கெய்துந் தகைபடைத்த
திண்ணியரே! செந்தமிழின் சீர்பாடுஞ் செல்வங்காள்!
தாயகத்தை மீட்கவொரு தம்பிமார் பட்டாளம்
ஆயத்த மாகிவிட்ட ஆனந்தச் செய்தியினை
நாட்டினர்க்கும் நாடாளும் நல்லவர்க்கும் காட்டவே
வீட்டுக் கொருவராய் வந்திருக்கும் வீரர்காள்!

சென்றபழங் காலத்தைச் சிந்தையிற் கொண்டுவந்
தின்றேனும் இன்பப் பெருமூச் செறிந்துகொள்வோம்!
பூம்புகார்ப் பட்டினத்தைப் பொல்லாநீர் கொள்ளுமுன்பு
நாம்புகழ் மேவிநின்ற நாளைநான் கூறவில்லை!
தன்மானத் தந்தையொடு தன்னலம் சற்றுமின்றிப்,
பொன்னான வாலிபத்தில் பொங்கிவரும் ஆர்வமுடன்
தொண்டாற்றச் சென்றகாலை தூயநம் நெஞ்சகத்தில்
வெண்தாடி வேந்தரன்றோ வேலினை வீசிமேலும்,
கானகத்துக் காரிருளில் மாணவர்கள் தேம்பியழப்
போனதெலாம் கண்டு புலம்பிப் பொதுவாழ்வே
வீணான தெண்ணி வெதும்பிமனம் வாடினோம்!
ஆனாலும் நல்ல அறிகுறிதான்; அங்குள்ள
கொள்கைக் குழப்பம், குருடர்போல் பின்பற்றிச்
செல்வ தெனுஞ்சிறையிற் சிக்காது மீண்டோம்!

ஒளிகாட்ட வானில் உதிக்குங் கதிர்போல்
வழிகாட்ட வந்தார் மகிழ்ச்சியுடன் அண்ணா!
புதுவாழ்வும், புத்துணர்வும், பூரிப்பும் பெற்று,
மெதுவாக என்றாலும் மேன்மை குறையாது,
நாளும் வளர்கின்றோம், நாவின் வலிமையினால்;
ஆளும் அரசும் அதையின்னும் வெட்டவில்லை!

தென்னாடு மிக்கபுகழ் தேங்கும் பழநாடாம்!
எந்நாடும் இந்நாட்டை எந்நாளும் வென்றதில்லை!
நேற்றுவந்த வெள்ளையன்தன் நேர்மையற்ற செய்கையால்
நூற்றாண் டிரண்டாய் நுடங்கா தரசோச்சி
விஞ்ஞானந் தந்த விதவிதமாம் ஆயுதத்தால்
அஞ்ஞான ஆயுதத்தின் சூழ்ச்சியினால் தாழ்ந்த
நமக்குள்ள தாய்நாட்டுப் பற்றை நசுக்கி
இமயமுதல் தென் குமரிஇந்தியா என்றுரைத்தான்.

சொந்த நலன்பேணும் சூது மதியினரும்
இந்திமொழிப் பித்தரும் இந்தியா ஒன்றென்றார்.
தேசியத்தின் பேரால் தியாகம் பலசெய்தோம்.
ஆசியாவை இங்கேன் ஐரோப்பா ஆளுவது
வெள்ளையரே எம்நாட்டை விட்டு வெளியேறும்.
கொள்ளையிட்ட தெல்லாம் கொடுத்துவிடும் என்றோம்.
உலகப்போர் தந்த நெருக்கடியால் உள்ளே

கலகலத்துப் போயிருந்த காரணத்தால் வெள்ளையனும்
இந்தா பிடியென்று இரண்டாய்ப் பிளந்துவிட்டுத்
தந்தானே அன்றே தகுதியுடன் நம்தலைவர்
கேட்டிருந்தால் இந்நேரம் கேடு மலியாமல்
நாட்டு விடுதலையும் நல்வாழ்வும் வந்திருக்கும்.

சென்றது பற்றிச் சிறிதும் வருந்தாமல்
இன்றுநாம் ஏற்றுள்ள இந்தப் பெரும்பொறுப்பு
நாட்டை விடுவிக்கும் நற்பணியாம் தென்னகத்தை
வேட்டைக் காடாக்க விரும்பும் வடநாட்டார்
என்றைக்கிருந்தாலும் இந்நாடு தம்மைவிட்டுச்
சென்று விடுமென்ற சிந்தனையால் தந்திரமாய்
ஆலை அணைக்கட்டுத் திட்டங்கள் அத்தனையும்
மேலைநா டொப்ப நிறுவுகிறார் மேன்மையுடன்.

பண்பாடு நாகரிகம் பண்டை இலக்கியங்கள்
கண்ணாய் மொழிகளை கற்பனையால் வேறான
தென்னாட்டில் வாழ்வோர் திராவிடர்கள் என்றுமே
அன்னியராம் நம்மையெலாம் ஆளும் வடநாட்டார்
என்னும் நிலைமைதனை இன்னும் உணராமல்
பின்னடைந்து வாடுகின்ற பேதையரும் வாழ்கின்றார்.

இந்த இழிவை இடித்துரைத்துக் காட்டுதற்கோ
எந்த இயக்கமும் இங்கில்லை; இந்நிலையில்
தன்னேரில் லாத தமிழ்போலத் தென்னகத்தில்
முன்னேற்றக் கட்சி முகிழ்த்துளது நம்பேரும்.

இந்நாட்டை மீட்கின்ற இணையில்லா ஓர்தலைவர்
இந்நாட்டு மண்ணில்தான் என்றும் பிறந்திடுவார்
என்கின்ற வாய்மையுரை ஏந்தி அவர்வழியில்
தங்கு தடைமீறித் தாராள மாய்ச்செல்வோம்!

துப்பாக்கி குண்டு துளைத்தாலும் மண்டையிலே
தப்பாமல் தாக்கும் தடியடிதான் பெற்றாலும்
கூவி அழைத்துக் கொடுஞ்சிறையிற் போட்டாலும்
ஆவி பிரிக்கும் அறப்போரே யானாலும்
பல்லா யிரம்பேர் படைபோல் அணிவகுத்துச்
செல்லத் தயாராய்த் திகழ்கின்றோம் எப்பொழுதும்!

இந்தத் தலைமுறையில் இன்பத் திருவிடத்தைச்
சொந்தமாய் ஆக்காமல் சோம்பித் திரிந்துவிட்டால்
இத்தகைய வாய்ப்பினிமேல் என்றுங் கிடைக்காது.
பத்தாண்டு காலத்தில் பாரில் பலநாடும்
தத்தமது நாட்டைத் தனிநாடாய்ச் செய்திருக்க
எத்தனையோ ஆண்டுகளாய் எண்ணற்ற காரணங்கள்
கூறிவந்தும் நாம்சொன்ன கோட்பாட்டைக் கேட்டவர்கள்
மாறிவிடா தின்னும் மனத்தெளிவு மில்லாது
சின்னஞ் சிறுநாடு தன்னந் தனியானால்
என்னென்ன தீமைகள் ஏற்படுமென் றஞ்சுகிறார்.

எல்லை சிறிதெனினும் எவ்வளவோ நீக்ரோவர்
தொல்லையின்றித் தம்நாட்டைச் சொந்தமாய் ஆளுகிறார்
ஒற்றுமை பெற்றுநாம் ஓங்கிக் குரலெழுப்பின்
பெற்றிட லாகாதோ உண்மைச் சுதந்திரத்தை!

ஆணவத்தின் உச்சியிலே ஆடும் வெறியர்கள்
காண விரும்பாமல் கண்ணில் திரையிடுவார்.
ஏராள மாகத்தாம் ஏற்றுமதி செய்பவற்றைத்
தாராள மாய்விற்கச் சந்தையென நம்நாட்டைத்
தம்பிடியில் வைத்திருப்போர் சம்மத மாதந்திடுவார்
நம்பி யிருத்தலும் நம்குறைதான் சிந்திப்போம்.

எங்கணுமே இல்லாத நல்வளங்கள் இங்குண்டு
தன்காலில் நின்றிடவும் தன்னிறைவுத் தன்மையுண்டாம்.
ஆண்ட பரம்பரையின் அன்புவழித் தோன்றல்நாம்.
மீண்டும் அரசாள மூண்ட விருப்புண்டு.
மக்கள் மனத்தில் மறையா இடம்பெற்றோம்.
மக்களாட்சி தந்த மகத்தான சத்தியினால்
பாராளும் நற்பயிற்சிப் பாசறையாய் மாறிவிட்டோம்.
ஊராள நேர்ந்தால் உவகையுடன் ஏற்போம்.
விடுதலை என்றால் வெறும்பேச்சால் ஆமோ?
கெடுதலே இன்றிக் கிளர்ச்சிகள் செய்வோம்:
திராவிட நாடு திராவிடரின் சொத்து
திராவிடம் பெற்றால் சிறப்போடு வாழ்வோம்;
பிறந்தோம் மனிதராகப் பெற்றபயன் என்ன
மறந்தோம் இலைநம் மறத்தமிழர் மாண்பை
இறந்தோம் பெரிதாம் இலட்சியத்தில் வெல்லச்
சிறந்தோம் தியாகத்தால் செம்மையுற் றோமென
ஒவ்வொரு தோழரும் உள்ளம் நிமிர்ந்திட்டால்
அவ்வொரு நாளே அரும்பெரும் நாளாகக்
கண்டு மகிழ்ந்திருக்கும் காலம் விரைந்துவரத்
தொண்டு புரிவோம் தொடர்ந்து.

[காரைக்காலில் நடைபெற்ற தி. மு. க. முத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் அரங்கேற்றப்பட்டது.]

புதுவையில்

தி. மு. க. சிறப்பு மாநாடு

மே 2, 3-ம் (சனி, ஞாயிறு) நாட்களில்
புதுவை 'ரோடியர்' திடலில்
நடைபெறும்.

தலைவர்:
எம். பி. சுப்ரமணியம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ.

திறப்பாளர்:
பி. ஆர். கோகுலகிருட்டினன் பி. ஏ., பி. எல்.

அண்ணா, நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள், நடிகர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

நாகூர் அனீபா,
மதுரை சந்திரா
இசை நிகழ்ச்சிகளும்,

3—5—59 அன்று
மு. கருணாநிதி
எம். எல். ஏ. நடிக்கும்
'உதயசூரியன்'
நாடகமும் நடைபெறும்.

என்ன விநோதம் பார்!

சென்னை நகராண்மைக் கழகத் தேர்தலில் பார்ப்பனர் ஓட்டுகளைப் பெற்றுத்தான் தி. மு. க. வெற்றி பெற்றது என்று 'விடுதலை'யார் எழுதுகிறார்.

ஆனால், அவர் தம் இச்சைக்குகந்த பச்சைத் தமிழர் காமராசரோ; குடிசை வாழ்வோர், தாழ்த்தப்பட்டோர், நடுத்தர மக்களுக்கும் கீழ்ப்படியில் உள்ளவர்கள் ஆகியோரது வாக்குகளைப் பெற்றே தி. மு. க. வெற்றி பெற்றிருக்கிறது—என்று அபிப்பிராயப்படுகிறார்!

மாயவரம் நகரசபைத் தலைவர் தேர்தலில் எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்களுக்கு இரண்டு திராவிடர் கழக நகரசபை உறுப்பினர்கள் ஓட்டு அளித்து வெற்றிபெறச் செய்து, தங்கள் "பார்ப்பன எதிர்ப்பை"க் காட்டிக் கொண்டதாக செய்தி நம் செவிகளில் எட்டுகிறது. 'விடுதலை'யாரின் "அனந்தராம கிருஷ்ணக் கொள்கை"க்கு இது உடன்பாடுதான் போலும்!

★ ★ ★

"அவாளுக்கு 37 தாண்டி கிடைச்சுது! நமக்கு 45 சீட் கிடைச்சிருக்குடி!" என்று கார்ப்பரேஷன் தேர்தல் முடிவைப்பற்றி பார்ப்பனர் ஒருவர் தன் மனைவியிடம் பேசிக் கொண்டிருந்ததை அருகில் நின்று கேட்டதாக 14—4—59—ல் 'விடுதலை'யார் எழுதுகிறார்.

கணவனும் மனைவியும் ரகசியம் பேசிக் கொள்கிற இடங்களில் எல்லாம் இவர் தனது நீண்ட காதுகளை நீட்டுவது ஏனோ? "அய்யோ....கேட்க வெட்கமாகுதே!" என்று நமது அலுவலகச் சிறுவன் கண்ணையும் காதையும் பொத்திக் கொள்கிறான்!

★ ★ ★

சென்னையில் காங்கிரஸ் தோல்விக்கு முக்கியமான காரணம் என்ன தெரியுமா? சிந்தாதிரிப்பேட்டை ஒலிபெருக்கியாம் 'விடுதலை' செப்புவதைக் கேளுங்கள்:

"காமராசர் ஆட்சியை ஆதரிக்கும் திராவிடர் கழகத்தார் நகர சபைத் தேர்தலில் தலையிட்டுப் பிரச்சாரம் செய்யவில்லை!"—இதுதான் காரணம் என்கிறார் 'விடுதலை'யார்.

"அய்யோ சாமி! போதும்! நீங்கள் தஞ்சாவூரில் காங்கிரசை ஆதரித்து தி. மு. க. வுக்கு 14—ம் காங்கிரசுக்கு 11—ம் என்று ஆக்கி, சேர்மேனாக வருவதற்கு ஒரு "லகரம்" வரையில் செலவு வைத்தீர்களே; அதுவே போதும்—சென்னையிலும் ஆதரித்து எங்கள் மென்னியை நெறிக்காமல் இருந்தீர்களே; அதுவரையில் சந்தோஷம்!" என்று தப்பித் தவறி ஜெயித்திருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்கள் கூறுகிறார்களாம்!

★ ★ ★

"முப்பது சதவிகித வாக்காளரே ஓட்டுச் சாவடிக்கு வந்தனர்" என்று முகாரி பாடுகிறார் முதலமைச்சர்!

'விடுதலை' என்ன கூறுகிறது? 9,36,314 பேர் ஓட்டர்கள்; அவர்களில் 4,16,900 பேர் வாக்களித்திருக்கின்றனர்—என்று 'விடுதலை' தலையங்கம் தீட்டுகிறது!

இதற்குப் பெயர் முப்பது சதவிகிதமா? காமராஜர் பதில் கூறுவாரா? நான் போய் அவரைக் கேட்கிறேனே! இது கணக்குத் தெரிந்தவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி ஆயிற்றே?

★ ★ ★

சென்னையில் தி. மு. கழக வெற்றியின் ரகசியத்தை மா. பொ. சி. கண்டுபிடித்து விட்டாராம்!

அய்யோ பாவம்; அவருக்கும் பேசுவதற்கு ஒரு "சப்ஜக்ட்" கிடைத்ததே என்று சென்னை தெருக்களில் ஒட்டப்பட்டிருக்கிற அவரது படம் போட்ட சுவரொட்டிகள் சொல்வதுபோல் தோன்றுகின்றன.

★ ★ ★

சேலத்தில் காங்கிரஸ்காரர்கள் காங்கிரசுக்கு துரோகம் செய்து விட்டார்களாம்.

சுயேச்சைகளை விலைக்கு வாங்கும் துரோகத்தைவிட இது ஒன்றும் பெரிய துரோகமில்லை—யென்று ஒரு தஞ்சாவூர்க்காரர் கூறுகிறார்!

மனிதனின் கதை...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

வழிகாட்டிகள் அவர்களுக்குத் தேவையாக இருந்தது. அவர்கள் வேண்டுகோளின்படி போலோவும், அவனுடைய தந்தை, சிறிய தந்தை ஆகியோரும் அவர்களுடன் வழிகாட்டிகளாகப் புறப்பட்டுச் சென்றனர். இம்முறை தரை மார்க்கமாக அவர்கள் வராமல் கடல் மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். குப்லாய்கான் விடைபெற்றுச் செல்லும் போலோவுக்கு ஏராளமான விலையுயர்ந்த மணிகளையும் பொன்னையும் வழங்கினான். கடல் மார்க்கமாக ஜாவா, சிலோன் முதலிய நாடுகளைத் தாண்டி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு டாப்ரிஸ் (Tabriz) துறைமுகத்தைப் போலோ குழுவினர் வந்தடைந்தனர்.

யாருக்காக குகாஷின் என்ற அழகியைக் கொண்டு வந்தனரோ அவன் இறந்து போய் விட்டான். ஆனால் அவனுடைய மகன், குகாஷினை மணந்து கொண்டான். தங்கள் கடமையை நிறைவேற்றியபின் போலோவும் அவன் தந்தையரும் தாயகம் திரும்பினர். ஆண்டுகள் பலவாகிவிட்டதால் வீட்டில் யாரும் அவர்களை உடன் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பெரும்பாடுபட்டுத் தாங்கள் யார் என நிரூபித்தனர். கந்தல் உடையில் இருந்த அவர்களைப் பார்த்து அனைவரும் கண்ணீர் விட்டனர். பத்திரமாகத் திரும்பி வந்ததைக் கொண்டாடும் முறையில் போலோ விருந்தொன்று நடத்தினான். விருந்தில் அனைவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, கந்தல் உடையில் இருந்த போலோவும், மற்ற இருவரும் திடீரெனக் கந்தல் உடையைக் கிழித்து உதறினர். அதில் பத்திரமாக வைத்துத் தைக்கப்பட்ட நவரத்தினங்கள் ஒளி உமிழ்ந்த வண்ணம் தரையெங்கும் ஓடிச் சிதறின. கந்தல் உடையில் வந்த சீமான்களை அனைவரும் வியப்புடன் நோக்கினர்! போலோவின் சொந்த நகரமான வெனிஸ் அவனைப் பிரபுவாக ஏற்றுக்கொண்டது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு வெனிஸ் நகருக்கும் ஜினோவா நகருக்குமிடையே போர் மூண்டது. போலோ கைதியானான். சிறையில் வீண் பொழுது போக்காமல் பிரயாண அனுபவங்களைச் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல நண்பன் ஒருவன் எழுதினான். நமக்கு வரலாற்றுச் சாசனம் ஒன்று கிடைத்தது.

மார்க்க போலோ வழிகாட்டி—ஒரு வகையில் அல்ல; பல வகைகளில்.

உன் அன்புள்ள,

அகத்தியன்.

இதயக் கூட்டிலே...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சிறந்து விளங்கினாலும், முதல் போடுகிறவர்கள் வடநாட்டில் இருப்பதால் தென்னாடு தனக்கேற்ற முன்னேற்றத்தை காணவில்லை. ஆனால், நாட்டின் மூலப் பொருட்களின் நிலைமை மோசமாயிருந்தாலும் இந்தச்சிமெண்ட் தொழிலில் நன்கு முன்னேற முடிகின்றது.

1960—61-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் பொழுது சிமெண்ட் தொழிலின் முன்னேற்றத்தை ஒருவாறு அறிந்து கொண்டால் தமிழகம் எவ்வளவு புறக்கணிக்கப்படுகின்றது என்பதை நன்கறியலாம். 1960—61-ல் சில ராஜ்யங்களில் சிமெண்ட் உற்பத்தியின் அளவு கீழ்வருமாறு:

மாநிலங்கள்	உற்பத்தி அளவு (1000 டன்களில்)
பீகார்	2324
சௌராஷ்டிரம்	1470
ராஜஸ்தான்	1284
மத்தியப் பிரதேசம்	1168
சென்னை	949

மேற்கண்டுள்ள விபரத்திலிருந்து முதல் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் உள்ள உற்பத்தி அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பீகாரில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவால் 100 சதவிகிதம் சிமெண்ட் உற்பத்தி கூடுதலாகின்றது. சௌராஷ்டிரம் 100 சதவிகிதம் சிமெண்ட் உற்பத்தியில் முன்னேறுகின்றது. ராஜஸ்தான் 150 சதவிகிதம் சிமெண்ட் உற்பத்தியில் வளர்ச்சி பெறுகின்றது. மத்தியப் பிரதேசம் 233 சதவிகிதம் சிமெண்ட் உற்பத்தியில் அதிகம் பெறுகின்றது. ஆனால், தமிழகமோ 50 சதவிகிதம்தான் சிமெண்ட் உற்பத்தியில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முன்னேறியிருக்கிறது.

எனவே, வடநாட்டிலேயுள்ள மாநிலங்கள் சிமெண்ட் உற்பத்தியில் ஒரு மடங்கு, இரு மடங்கென வளர, தமிழகமோ பாதி மடங்கு முன்னேறுகின்றது.

இந்தப் புறக்கணிப்பை எத்தனைக் காலம் அனுபவிப்பது? நமது நாடு எல்லாத் தொழில்களிலும் முன்னேற முயற்சிக்க வேண்டாமா? தடைக் கற்களை தூள் தூளாக்கி, எதிர்ப்படும் சுரண்டலை பொடிப் பொடியாக்கி, திராவிடம் தலைநிமிர்ந்து தனக்கான வழியில் முன்னேற ஒரேவழி விடுதலையாகும்; திராவிடம் விடுதலை காண உழைப்பது தொழில் வளத்தில் நாட்டம் செலுத்துவோருக்கு முதற் கடமையாகும்.

வருந்துகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களின் மாமனாரும், திருமதி புவனேசுவரி — நடராசன் அவர்களின் அருமைத் தந்தையாருமான ஞாயிறு குப்புசாமி அவர்கள் சென்ற 7—4—59 அன்று, சென்னை மருத்துவ விடுதியில் மாரடைப்பால் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தியறிந்து மாளாத் துயரடைந்தோம். அன்னாரது பிரிவால் வாடுகின்ற துணைப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும், சுற்றத்தினருக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு